# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **பொருத்துதல் : (i) பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல்**
**(ii) புகழ் பெற்ற நூல் நூலாசிரியர்**


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பொருத்துதல்

**பொருத்தமான பொருளைத் தேர்வு செய்தல்**

| | | |
|---|---|---|
| **1.** ஆர்வலர் | - | அன்புடையவர் |
| **2.** புன்கணீர் | - | துன்பம் கண்டு பெருகும் கண்ணீர |
| **3.** பூசல் தரும் | - | வெளிப்பட்டு நிற்கும் |
| **4.** என்பு | - | எலும்பு |
| **5.** வழக்கு | - | வாழ்க்கை நெறி |
| **6.** ஆருயிர் | - | அருமையான உயிர் |
| **7.** ஈனும் | - | தரும் |
| **8.** ஆர்வம் | - | விருப்பம் |
| **9.** நண்பு | - | நட்பு |
| **10.** வையகம் | - | உலகம் |
| **11.** என்ப | - | என்பார்கள் |
| **12.** மறம் | - | வீரம் |
| **13.** என்பிலது | - | எலும்பில்லாத (புழு) |
| **14.** தளிர்த்தற்று | - | தளிர்த்தது போல |
| **15.** வற்றல் மரம் | - | வாடிய மரம் |
| **16.** புறத்துறுப்பு | - | உடல் உறுப்புகள் |
| **17.** அகத்துறுப்பு | - | மனத்தின் உறுப்பு (அன்பு) |
| **18.** அன்பிலது | - | அன்பில்லாத உயிர்கள் |
| **19.** நாய்க்கால் | - | நாயின்கால் |
| **20.** ஈக்கால் | - | ஈயின்கால் |
| **21.** அணியர் | - | நெருங்கி இருப்பவர் |
| **22.** என்னாம் | - | என்ன பயன்? |
| **23.** சேய் | - | தூரம் |
| **24.** செய் | - | வயல் |
| **25.** அனையார் | - | போன்றார் |

| | | |
|---|---|---|
| **26.** கற்றைவார்சடையான்-சிவபெருமான் | | |
| **27.** உம்பரார் பதி | - | இந்திரன் |
| **28.** நுதல் விழி | - | நெற்றிகண் |
| **29.** பொற்பங்க யத்தடம் | - | பொற்றாமரைக் குளம் |
| **30.** ஆய்ந்த நாவலன் | - | நக்கீரன் |
| **31.** காய்ந்த நாவலன் | - | இறைவன் |
| **32.** கரந்தான் | - | மறைந்தான் |
| **33.** தரணி | - | உலகம் |
| **34.** தாரம் | - | மனையாள் |
| **35.** சேவை | - | தொண்டு |
| **36.** அயலார் | - | உறவல்லாதோர் |
| **37.** பண் | - | இசை |
| **38.** வண்மை | - | கொடைத் தன்மை |
| **39.** போற்றி | - | வாழ்த்துகிறேன் |
| **40.** சுடர் | - | ஒளி |
| **41.** ஆனந்தம் | - | மகிழ்ச்சி |
| **42.** பராபரம் | - | மேலான பொருள், இறைவன் |
| **43.** புரை | - | குற்றம் |
| **44.** பயக்கும் | - | தரும் |
| **45.** சுடும் | - | வருத்தும் |
| **46.** அன்ன | - | அவை போல்வன |
| **47.** எய்யாமை | - | வருந்தாமை |
| **48.** அகம் | - | உள்ளம் |

| | | |
|---|---|---|
| 49. அமையும் | - | உண்டாகும் |
| 50. வினை | - | செயல் |
| 51. காப்பு | - | காவல் |
| 52. நீரவர் | - | அறிவுடையார் |
| 53. கேண்மை | - | நட்பு |
| 54. பேதையார் | - | அறிவிலார் |
| 55. நவில்தோறும் | - | கற்கக் கற்க |
| 56. நலம் | - | இன்பம் |
| 57. நகுதல் | - | சிரித்தல் |
| 58. இடித்தல் | - | கடிந்துரைத்தல் |
| 59. கிழமை | - | உரிமை |
| 60. முகநக | - | முகம் மலர |
| 61. அகம் | - | உள்ளம் |
| 62. ஆறு | - | நல்வழி |
| 63. உய்த்து | - | செலுத்தி |
| 64. அல்லல் | - | துன்பம் |
| 65. உடுக்கை | - | ஆடை |
| 66. இடுக்கண் | - | துன்பம் |
| 67. களைவது | - | நீக்குவது |
| 68. ஊன்றும் | - | தாங்கும் |
| 69. புனைதல் | - | புகழ்தல் |
| 70. தைவந்து | - | தொட்டுத்தடவி |
| 71. பகழி | - | அம்பு |
| 72. இருநிலம் | - | பெரிய உலகம் |
| 73. ஊன் | - | தசை |
| 74. நாமம் | - | பெயர் |
| 75. அறிக்கை | - | அறிதல் வேண்டும் |
| 76. தானை | - | படை |
| 77. கடனே | - | கடமை |
| 78. ஆர்கலி | - | நிறைந்த ஓசையுடைய கடல் |
| 79. காதல் | - | அன்பு, விருப்பம் |
| 80. மேதை | - | அறிவு நுட்பம் |

| | | |
|---|---|---|
| 81. வண்மை | - | ஈகை, கொடை |
| 82. பிணி | - | நோய் |
| 83. மெய் | - | உடம்பு |
| 84. நாணம் | - | செய்யத்தகாதன வற்றின்கன் உள்ள மொருங்குதல் |
| 85. சிறந்தன்று | - | சிறந்தது |
| 86. வழிபடுதல் | - | போற்றி வணங்குதல் |
| 87. தற்செய்கை | - | தன்னைச் செல்வம் முதலியவற்றில் மேம்படுத்தி கொளஎல் |
| 88. உண்பொழுது | - | உண்ணும் போது |
| 89. பெறினும் | - | பெற்றாலும் |
| 90. பால்பற்றி | - | ஒரு பக்கச் சார்பு |
| 91. தோல்வற்றி | - | தோல் சுருங்கி |
| 92. கைம்மாறு | - | பயன் |
| 93. மாசற்ற | - | குற்றமற்ற |
| 94. தேட்டை | - | திரட்டிய செல்வம் |
| 95. மீட்சி | - | மேன்மை |
| 96. மாள | - | நீங்க |
| 97. தாது | - | மகரந்தம் |
| 98. போது | - | மலர் |
| 99. பொய்கை | - | குளம் |
| 100. பூகம் | - | கமுகம் (பாக்குமரம்) |
| 101. திறல் | - | வலிமை |
| 102. மறவர் | - | வீரர் |
| 103. மதி | - | அறிவு |
| 104. அமுதகிரணம் | - | குளிர்ச்சியான ஒளி |
| 105. உதயம் | - | கதிரவன் |
| 106. மதுரம் | - | இனிமை |
| 107. நறவம் | - | தேன் |

| | | |
|---|---|---|
| 108. கழுவிய துகளர் | - | குற்றமற்றவர் |
| 109. சலதி | - | கடல் |
| 110. அலகு இல் | - | அளவில்லாத |
| 111. புவனம் | - | உலகம் |
| 112. மதலை | - | குழந்தை |
| 113. பரிதிபுரி | - | கதிரவன் வழிபட்ட இடம் (வைதீஸ்வரன் கோவில்) |
| 114. திடம் | - | உறுதி |
| 115. மெய்ஞானம் | - | மெய்யறிவு |
| 116. உபாயம் | - | வழிவகை |
| 117. நகை | - | புன்னகை |
| 118. முகை | - | மொட்டு |
| 119. மேனி | - | உடல் |
| 120. வழக்கு | - | நன்னெறி |
| 121. ஆன்ற | - | உயர்ந்த |
| 122. நயன் | - | நேர்மை |
| 123. நன்றி | - | உதவி |
| 124. நகையுள்ளம் | - | விளையாட்டாகவும் |
| 125. பாடறிவார் | - | நெறியுடையார் |
| 126. மாய்வது | - | அழிவது |
| 127. அரம் | - | வாளைக் கூர்மையாக்கும் கருவி |
| 128. நண்பு | - | நட்பு |
| 129. நயம் இல | - | தீங்கு, இணையற்ற |
| 130. கடை | - | பழுது |
| 131. நகல்வல்லர் | - | சிரித்து மகிழ்பவர் |
| 132. மாயிருஞாலம் | - | மிகப்பெரிய உலகம் |
| 133. திரிந்தற்று | - | திரிவது போன்றது |
| 134. பசியாறாது | - | பசித்துயர் நீங்காது |
| 135. நீடிய | - | தீராத |
| 136. வான்பெற்ற நதி | - | கங்கையாறு |

| | | |
|---|---|---|
| 137. களபம் | - | சந்தனம் |
| 138. துழாய் அலங்கல் | - | துளசிமாலை |
| 139. புயம் | - | தோள் |
| 140. காசினி | - | நிலம் |
| 141. நன்னுதல் | - | நல்ல நெற்றி |
| 142. வெள்கி | - | நாணி |
| 143. களிகூர | - | மகிழ்ச்சி பொங்க |
| 144. வயவேந்து | - | வலிமை மிகு அரசன் நளன் |
| 145. ஒண்தாரை | - | ஒளிமிக்க மலர்மாலை |
| 146. மது | - | தேன் |
| 147. தியங்கி | - | மயங்கி |
| 148. சம்பு | - | நாவல் |
| 149. மதியம் | - | நிலவு |
| 150. வாய்மை | - | உண்மை |
| 151. களையும் | - | நீக்கும் |
| 152. வண்மை | - | வள்ளல் தன்மை |
| 153. துலங்குதல் | - | விளங்குதல் |
| 154. சேய்மை | - | தொலைவு |
| 155. தவம் | - | பெரும்பேறு |
| 156. கலாபம் | - | தோகை |
| 157. விவேகன் | - | ஞானி |
| 158. கோல | - | அழகிய |
| 159. இசைந்த | - | பொருத்தமான |
| 160. வாவி | - | பொய்கை |
| 161. மாதே | - | பெண்ணே |
| 162. குவடு | - | மலை |
| 163. பொன்னி | - | காவிரி |
| 164. கோது | - | குற்றம் |
| 165. அரவம் | - | பாம்பு |
| 166. மயரி | - | மயக்கம் |
| 167. கழறும் | - | பேசும் |

| | | |
|---|---|---|
| **168.** சலவர் | - | வஞ்சகர் |
| **169.** மன்னுயிர் | - | நிலைபெற்ற உயிர் |
| **170.** குவை | - | குவியல் |
| **171.** மாரன் | - | மன்மதன் |
| **172.** வள்ளை | - | நெல் குத்தும் போது பெண்களால் பாடப்படும் ஒரு வகைப்பாட்டு |
| **173.** அளகு | - | கோழி |
| **174.** ஆழி | - | கடல் |
| **175.** விசும்பு | - | வானம் |
| **176.** செற்றான் | - | வென்றான் |
| **177.** அரவு | - | பாம்பு |
| **178.** பிள்ளைக் குருகு | - | நாரைக்குஞ்சு |
| **179.** வள்ளை | - | ஒரு வகை நீர்கொடி |
| **180.** கடா | - | எருமை |
| **181.** வெளவி | - | கவ்வி |
| **182.** மேதி | - | எருமை |
| **183.** கள் | - | தேன் |
| **184.** புள் | - | அன்னம் |
| **185.** சேடி | - | தோழி |
| **186.** ஈரிருவர் | - | நால்வர் |
| **187.** ஊசலாடுற்றாள் | - | மனம் தடுமாறினாள் |
| **188.** செம்மைசேர் | - | புகழ் மிகு |
| **189.** கடிமாலை | - | மணமாலை |
| **190.** சூழ்விதி | - | நல்வினை |
| **191.** தார் | - | மாலை |
| **192.** குணக்கடலே! | - | முருகனை இவ்வாறு அருட்கடலே! அழைக்கிறார் |
| **193.** குறைகடல் | - | ஒலிக்கும் கடல் |
| **194.** பரங்குன்றுளான் | - | திருப்பரங் குன்றத்தில் உள்ள முருகன் |
| **195.** வானரங்கள் | - | குரங்குகளைக் குறிக்கும் (ஆண் குரங்கு) |
| **196.** மந்தி | - | பெண் குரங்குகள் |
| **197.** வான் கவிகள் | - | தேவர்கள் |
| **198.** கமனசித்தர் | - | வான் வழியே நினைத்த இடத்துக்குச் செல்லும் சித்தர்கள் |

**புகழ்பெற்ற நூல்/நூலாசிரியர்கள்**

❖ இப்பகுதியில் வினாக்கள் பெரும்பாலும் பொருத்துக வகையிலும், நேரடி வினாக்களாகவும் அமைக்கப்படுகிறது. இப்பகுதிக்கேற்ப புகழ்பெற்ற நூல் - நூலாசிரியர்களின் பெயர்கள் எளிமையாக தொகுக்கப்பட்டுள்ளது. இவற்றை நன்கு படித்து தெரிந்து கொண்டால் எளிதில் விடையளிக்க முடியும்.

| வ. எண். | நூலாசிரியர் | நூல் |
|---|---|---|
| 1. | இராமலிங்க அடிகள் | 1. திருவருட்பா<br>2. மனுமுறை கண்ட வாசகம்<br>3. ஜீவகாருண்ய ஒழுக்கம் |
| 2. | திருவள்ளுவர் | திருக்குறள் |
| 3. | நாலடியார்(நூலாசிரியர்)<br>தொகுத்தவர் | சமண முனிவர்<br>பதுமனார் |
| 4. | பாரதியார் | 1. பாரத நாடு, 2. செந்தமிழ் நாடு,<br>3. தமிழ்த்தாய் 4. தேசிய கீதங்கள்,<br>5. விநாயகர் நான்மணிமாலை<br>6. பாப்பாப் பாட்டு, 7. முருகன் பாட்டு,<br>8. கண்ணன் பாட்டு, 9. குயில் பாட்டு,<br>10. பாஞ்சாலி சபதம்,<br>11. சீட்டுக்கவி, 12. புதிய ஆத்திச்சூடி,<br>13. முரசு<br>**(உரைநடை நூல்கள்)**<br>1. ஞானரதம், 2. சந்திரிகையின் கதை,<br>3. தராசு |
| 5. | விளம்பி நாகனார் | 1. நான்மணிக்கடிகை |
| 6. | பாரதிதாசன் | 1. குடும்ப விளக்கு, 2. அழகின் சிரிப்பு,<br>3. இருண்டவீடு, 4. இசையமுது,<br>5. குறிஞ்சித்திட்டு,<br>6. தமிழியக்கம், 7. மணிமேகலை வெண்பா,<br>8. கண்ணகி புரட்சிக் காப்பியம்,<br>9. எதிர்பாராத<br>முத்தம், 10. பாண்டியன் பரிசு,<br>11. இளைஞர் இலக்கியம்,<br>12. சேரதாண்டவம்,<br>13. தமிழச்சியின் கத்தி,<br>14. பிசிராந்தையார், 15. குயில் (இதழ்) |
| 7. | முன்றுரையனார் | 1. பழமொழி நானூறு |
| 8. | சிவப்பிரகாச சுவாமிகள் | 1. நன்னெறி, 2. பிரபுலிங்க லீலை,<br>3. நால்வர் நான்மணிமாலை, |

| | | |
|---|---|---|
| | | 4. காலத்திப்புராணம்,<br>5. கண்ணப்பச்சுருக்கம் |
| 9. | வல்லூர் தேவராசப் பிள்ளை | 1. குசேலோபாக்கியானம் |
| 10. | கண்ணதாசன் | 1. மாங்கனி, 2. ஆட்டனத்தி ஆதிமந்தி,<br>3. அர்த்தமுள்ள இந்துமதம்,<br>4. சேரமான் காதலி,<br>5. வனவாசம் மனவாசம்,<br>6. இயேசு காவியம்,<br>7. வேலங்குடி திருவிழா,<br>8. கையறுநிலை,<br>9. தைப்பாவை<br>**பத்திரிக்கைகள்:**<br>1. தென்றல், 2. தென்றல் திரை,<br>3. சண்டமாருதம்<br>4. முல்லை, 5. கண்ணதாசன் |
| 11. | சத்திமுத்தப் புலவர் | 1. நாரைவிடு தூது |
| 12. | செயங்கொண்டார் | 1. கலிங்கத்துப்பரணி |
| 13. | குமரகுருபரர் | 1. மீனாட்சியம்மை குறம்<br>2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்<br>3. கந்தர் கலிவெண்பா<br>4. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்<br>5. நீதிநெறி விளக்கம்<br>6. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை<br>7. மதுரைக் கலம்பகம்<br>8. திருவாரூர் நான்மணிமாலை<br>9. சிதம்பர மும்மணிக்கோவை<br>10. சிதம்பர செய்யுட்கோவை<br>11. சகலகலா வல்லி மாலை<br>12. காசிக்கலம்பகம் |
| 14. | வேதநாயகம் பிள்ளை | 1. பிரதாப முதலியார் சரித்திரம்,<br>2. நீதிநூல் திரட்டு,<br>3. பெண்மதி மாலை,<br>4. சர்வசமய கீர்த்தனைகள்,<br>5. வேததோத்திர மாலை |
| 15. | கவிஞர் செம்பை சேவியர் | 1. அறிவியல் சிந்தனைகள்,<br>2. பூந்தளிர்<br>3. புதுத்தென்றல்,<br>4. அறிவியல் அறிந்திடு பாப்பா |
| 16. | பெ. சுந்தரம் பிள்ளை | 1. மனோன்மணீயம் |
| 17. | கணிமேதாவியார் | 1. ஏலாதி, 2. திணைமாலை நூற்றைம்பைது |

| | | |
|---|---|---|
| 18. | பொய்கையார் | 1. இன்னிலை, 2. களவழி நாற்பது |
| 19. | பரஞ்சோதி முனிவர் | 1. திருவிளையாடல் புராணம்<br>2. வேதாரண்ய புராணம்<br>3. திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா<br>4. மதுரை பதிற்றுப்பத்தந்தாதி |
| 20. | கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | 1. ஆசிய ஜோதி<br>2. மலரும் மாலையும்<br>3. குழந்தைச் செல்வம்<br>4. உமர்கய்யாம் பாடல்கள்<br>5. இளந்தென்றல்<br>6. மருமக்கள் வழி மான்மியம்<br>7. தேவியின் கீர்த்தனைகள் |
| 21. | திரிகூடராசப்பக் கவிராயர் | 1. திருகுற்றாலக் குறவஞ்சி |
| 22. | இரட்டைப் புலவர்கள் | 1. தில்லைக் கலம்பகம்<br>2. ஏகாம்பரநாதர் உலா<br>3. திருவாமாத்தூர்க் கலம்பகம் |
| 23. | புலவர் காமாட்சி நாதன் | 1. வள்ளலார் பிள்ளைத்தமிழ் |
| 24. | ஆசிரியர் தெரியவில்லை | முக்கூடற்பள்ளு |
| 25. | தொட்டிக்கலை சுப்ரமணிய முனிவர் | 1. கலசைக் கோவை,<br>2. கலசைச் சிலேடை வெண்பா<br>3. கலசை சிதம்பரேசர் பரணி,<br>4. திருவாவடுதுறை கோவை,<br>5. சிவஞான முனிவர் துதி |
| 26. | திருமதி. சௌந்தரா கைலாசம் | 1. பெண்மை வெல்க |
| 27. | கவிஞர் அரசுமணிமேகலை | 1. முன்னேற்றம் முடக்குவது |
| 28. | கோ. பெரியண்ணன் | 1. வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்<br>2. சிறுவர் இன்னிசை பாடல்கள்<br>3. அடிப்படைத் தமிழ் இலக்கணம்<br>4. தென்தமிழகம் தந்த தியாக தீபங்கள் |
| 29. | மு.வே. கங்காதரன் | 1. பாட்டெழுது |
| 30. | திருநாவுக்கரசர் | 1. தேவாரம் |
| 31. | குலசேகராழ்வார் | 1. பெருமாள் திருமொழி |
| 32. | திரு.வி.க. | 1. முருகன் அல்லது அழகு,<br>2. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,<br>3. பொதுமை வேட்டல், 4. தமிழ்த் தென்றல்,<br>5. உரிமை வேட்கை,<br>6. முருகன் அருள் வேட்டல்,<br>7. கிருஸ்துவின் அருள் வேட்டல்,<br>8. திருமால் அருள் வேட்டல்,<br>9. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, |

| | | |
|---|---|---|
| | | 10. இந்தியாவும் விடுதலையும்,<br>11. வாழ்க்கை வழி,<br>12. ராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்,<br>13. பெண்ணின் பெருமை |
| 33. | நல்லாதனார் | திரிகடுகம் |
| 34. | இளங்கோவடிகள் | சிலப்பதிகாரம் |
| 35. | கம்பர் | 1. கம்பராமாயணம்,<br>2. சடகோபர் அந்தாதி,<br>3. ஏரெழுபது,<br>4. சரஸ்வதி அந்தாதி,<br>5. திருக்கை வழக்கம், 6. சிலைஎழுபது |
| 36. | எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை | 1. இரட்சணிய யாத்திரிகம்<br>2. இரட்சணிய சமய நிர்ணயம்<br>3. இரட்சணிய மனோகரம்<br>4. இரட்சணிய குறம் |
| 37. | கவிஞர் துறைவன் | 1. வள்ளத்தோள் பாடல்கள் |
| 38. | ஒட்டக்கூத்தர் | 1. தக்கயாக்கப்பரணி,<br>2. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்,<br>3. மூவருலா, 4. ஈட்டி எழுபது,<br>5. நாலாயிர கோவை |
| 39. | சீத்தலைச் சாத்தனார் | 1. மணிமேகலை |
| 40. | கபிலர் | 1. குறிஞ்சிப்பாட்டு, 2. இன்னா நாற்பது |
| 41. | அண்ணாமலை ரெட்டியார் | 1. காவடிச் சிந்து, 2. வீரையந்தாதி,<br>3. சங்கரன்கோவில் திருவந்தாதி,<br>4. கருவை மும்மணிக்கோவை,<br>5. சீட்டுக்கவி |
| 42. | வாணிதாசன் | 1. விண்மீன் கூட்டம்,<br>2. குழந்தை இலக்கியம்,<br>3. கொடிமுல்லை,<br>4. எழிலோவியம்,<br>5. தமிழச்சி,<br>6. பொங்கல் பரிசு,<br>7. இன்ப இலக்கியம்,<br>8. தீர்த்த யாத்திரை |
| 43. | கவிஞர் தமிழ் ஒளி | 1. கண்ணப்பன்கிளிகள், 2. வீராயி |
| 44. | நம்மாழ்வார் | 1. திருவாய்மொழி, 2. பெரிய திருவந்தாதி,<br>3. திருவாச்சரியம், 4. திருவிருத்தம் |
| 45. | நாதகுத்தனார் | 1. குண்டலகேசி |
| 46. | உமறுப்புலவர் | 1. சீறாப்புராணம், சீதக்காதி நொண்டி நாடகம் |

| | | |
|---|---|---|
| 47. | கவிஞர் சுரதா | 1. தேன்மழை, 2. துறைமுகம்,<br>3. சுவரும் சுண்ணாம்பும் |
| 48. | தாரா பாரதி | 1. புதிய விடியல்கள்,<br>2. விரல் நுனி வெளிச்சங்கள்<br>3. பூமியைத் திறக்கும் பொன்சாவி,<br>4. இன்னொரு சிகரம் |
| 49. | கவிக்கோ அப்துல் ரகுமான் | 1. தீக்குச்சிகள், 2. சுட்டுவிரல், 3. பால்வீதி,<br>4. நேயர் விருப்பம், 5. சொந்தச் சிறைகள்,<br>6. கரைகளே நதியாவதில்லை,<br>7. விலங்குகள் இல்லாத கவிதை |
| 50. | பனு அகமது மரைக்காயர் | 1. சின்னச்சீறாபுராணம் |
| 51. | வீரமா முனிவர் | 1. தேம்பாவணி, 2. தொன்னூல் விளக்கம்,<br>3. சதுரகராதி,<br>4. கொடுந்தமிழ் இலக்கணம்,<br>5. செந்தமிழ் இலக்கணம்,<br>6. பரமார்த்த குரு கதைகள்,<br>7. வேதியர் ஒழுக்கம்,<br>8. கித்தேரியம்மாள் அம்மானை,<br>9. திருக்காவலூர் கலம்பகம் |
| 52. | அருணகிரிநாதர் | 1. திருப்புகழ் |
| 53. | மாங்குடி மருதனார் | 1. மதுரைக் காஞ்சி |
| 54. | நக்கீரர் | 1. நெடுநல்வாடை,<br>2. திருமுருகாற்றுப்படை,<br>3. இறையனார் அகப்பொருள் |
| 55. | நல்லூர் நத்தத்தனார் | சிறுபாணாற்றுப்படை |
| 56. | தொல்காப்பியர் | தொல்காப்பியம் |
| 57. | வால்மீகி | இராமயணம்(வடமொழி) |
| 58. | பெருந்தேவனார் | மகாபாரதம் (தமிழ்), பாரத வெண்பா |
| 59. | வியாசர் | மகாபாரதம் (வடமொழி) |
| 60. | வில்லிபுத்தூரார் | வில்லி பாரதம் |
| 61. | திருமூலர் | திருமந்திரம் |
| 62. | சங்கர்தாஸ் சுவாமிகள் | அபிமன்யு, சுந்தரி, பவளக்கொடி, சீமந்தினி, சதி அனுசூயா, பிரகலாதன், வள்ளி திருமணம், சிறுதொண்டர் புராணம் |
| 63. | R.S. மனோகர் | இலங்கேஸ்வரன், சாணக்கிய சபதம் |
| 64. | நல்ல பெருமாள் | கல்லுக்குள் ஈரம், போராட்டங்கள், திருடர்கள் |
| 65. | சேக்கிழார் | பெரியபுராணம் |
| 66. | புகழேந்தி | நளவெண்பா |

| | | |
|---|---|---|
| 67. | அரங்கசீனிவாசன் | மனித தெய்வம், காந்தி கதை |
| 68. | ஆண்டாள் | திருப்பாவை |
| 69. | தொண்டரடிப்பொடியாழ்வார் | திருப்பள்ளியெழுச்சி, திருமாலை |
| 70. | புலவர் குழந்தை | இராவண காவியம், காமஞ்சரி, தீரன் சின்னமலை கொங்கு வரலாறு, நெருஞ்சிப்பழம், தமிழக வரலாறு |
| 71. | சைவ எல்லப்ப நாவலர் | திருவானைக்கா கலம்பகம் |
| 72. | காளிதாசர் | சாகுந்தலம், ரகுவம்சம், குமார சம்பவம் |
| 73. | ராஜாஜி | சக்கரவர்த்தி திருமகள், வியாசர் விருந்து |
| 74. | நாமக்கல் கவிஞர் | தமிழன் இதயம், கவிதாஞ்சலி, காந்தி அஞ்சலி, தமிழ்த்தேர், சங்கொலி, என் கதை, மலைக்கள்ளன், திருக்குறள் - புது உரை, தமிழ்வேந்தன், அன்பு செய்த அற்புதம், அவனும் அவளும் |
| 75. | பம்மல் சம்பந்த முதலியார் | மனோகரா, வேதாள உலகம் |
| 76. | பாணர் | ஹர்ச சரிதம், காதம்பரி |
| 77. | ஜெகச்சிற்பி | சொர்க்கத்தின் நிழல், ஞானக்குயில், பத்தினிக் கோட்டம், திருச்சிற்றம்பலம் |
| 78. | ஜானகிராமன் | மரப்பசு, மோகமுள், அம்மா வந்தாள், செம்பருத்தி |
| 79. | அழ. வள்ளியப்பா | சிரிக்கும் பூக்கள், வெற்றிக்கு வழி, நேருவும் குழந்தைகளும் |
| 80. | ராஜம் கிருஷ்ணன் | வேருக்கு நீர், கரிப்பு மணிகள், குறிஞ்சித்தேன் |
| 81. | நா. பார்த்தசாரதி | துளசிமாடம், மணிப்பல்லவம், சமுதாய வீதி, குறிஞ்சிமலர், பொன்விலங்கு, ஆத்மாவின் ராகங்கள், பாண்டியன் தேவி, நெருப்புக்கனிகள், வலம்புரிச்சங்கு |
| 82. | புதுமைப்பித்தன் | பொன்னகரம், சாப விமோட்சனம், அகலிகை, கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், கயிற்றரவு, சிற்பியின் நகரம் |
| 83. | பூதஞ்சேந்தனார் | இனியவை நாற்பது |
| 84. | கா. நமச்சிவாயர் | கீசகன், பிருதிவிராசன் |
| 85. | கண்ணன் கூத்தனார் | கார் நாற்பது |
| 86. | மாறன் பொறையனார் | ஐந்திணை ஐம்பது |
| 87. | மூவாதியார் | ஐந்திணை எழுபது |
| 88. | காரியாசான் | சிறுபஞ்சமூலம் |
| 89. | பெருவாயின் முள்ளியார் | ஆசாரக்கோவை |
| 90. | நம்பியாண்டார் நம்பி | திருத்தொண்டர் திருவந்தாதி |

| | | |
|---|---|---|
| 91. | தோலாமொழித் தேவர் | சூளாமணி |
| 92. | புத்தமித்திரர் | வீரசோழியம் |
| 93. | பவணந்தி முனிவர் | நன்னூல் |
| 94. | படிக்காசுப் புலவர் | தொண்டைமண்டல சதகம் |
| 95. | கச்சியப்ப சிவாச்சாரியார் | கந்தபுராணம் |
| 96. | அதிவீரராம பாண்டியன் | நைடதம் |
| 97. | வீரகவிராயர் | அரிச்சந்திர புராணம் |
| 98. | வேதநாயக சாஸ்திரி | பெத்லகேம் குறவஞ்சி |
| 99. | மறைமலை அடிகள் | அம்பிகாபதி-அமராவதி கோகிலாம்பாள் கடிதங்கள் |
| 100. | வ.வே.சு. ஐயர் | புதியதும் பழையதும், என் சரிதம், நினைவஞ்சலி, குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை, கண்டதும் கேட்டதும் |
| 101. | சிவசங்கரி | ஒரு மனிதனின் கதை, அவன், பாலங்கள் |
| 102. | ஆ. சிங்காரவேல முதலியார் | அபிதான சிந்தாமணி |
| 103. | மண்டலப்புருடர் | சூளாமணி நிகண்டு |
| 104. | தகழி சிவசங்கரன் பிள்ளை | செம்மீன் |
| 105. | பரிதிமாற் கலைஞர் | தமிழ்மொழி வரலாறு, நாடகவியல், மதிவாணன், மானவிஜயம், ரூபாவதி |
| 106. | உலகநாதர் | உலகநீதி |
| 107. | கால்டுவெல் | திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் |
| 108. | சேரமான் பெருமாள் நாயனார் | திருக்கைலாய ஞான உலா |
| 109. | கொத்தமங்கலம் சுப்பு | தில்லானா மோகனாம்பாள் |
| 110. | கோபாலகிருஷ்ண பாரதியார் | நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் |
| 111. | கலைஞர். மு. கருணாநிதி | நெஞ்சுக்கு நீதி, காகிதப்பூ, பராசக்தி, சங்கத்தமிழ், ரோமாபுரிப் பாண்டியன், குறளோவியம் |
| 112. | குணவீர பண்டிதர் | நேமிநாதம், வச்சணந்தி மாலை |
| 113. | விஷ்ணுசர்மா | பஞ்சதந்திரக் கதைகள் |
| 114. | ரா.கி. ரங்கராஜன் | பல்லக்கு |
| 115. | கொங்குவேளிர் | பெருங்கதை |
| 116. | பெருந்தேவனார் | பாரத வெண்பா |
| 117. | இலட்சுமி | பெண்மனம், காஞ்சனையின் கனவு |
| 118. | ஹர்ஷர் | ரத்னாவளி, பிரியதர்சிகா, நாகானந்தா |
| 119. | திருமாறன் | சாணக்கிய சபதம் |
| 120. | மு. கதிரேசன் செட்டியார் | மண்ணியல் சிறுதேர் |
| 121. | தாயுமானவர் | ஆனந்தக் களிப்பு, திருப்பாடல்கள் |
| 122. | விபுலானந்தர் | மதங்கசூளாமணி, யாழ் நூல் |
| 123. | அருணாசலக் கவிராயர் | இராம நாடகம் |
| 124. | நாதமுனிகள் | நாலாயிர திவ்வியப் பிரபந்தம் |

| | | |
|---|---|---|
| 125. | ராஜம் ஐயர் | கமலாம்பாள் சரித்திரம் |
| 126. | நம்பியாண்டார் நம்பி | பன்னிரு திருமுறை தொகுத்தவர் |
| 127. | ஜெயதேவர் | கீதகோவிந்தம் |
| 128. | புல்லங்காடனார் | கைந்நிலை |
| 129. | கபிலர் | குறிஞ்சிப்பாட்டு |
| 130. | கி. ராஜேந்திரன் | சாருலதா |
| 131. | தேவநேயப் பாவாணர் | முதல் தாய்மொழி, வடமொழி வரலாறு |
| 132. | கூடலூர்க்கிழார் | முதுமொழிக் காஞ்சி |
| 133. | கே. பாலசந்தர் | மேஜர் சந்திரகாந்த் |
| 134. | அமிர்தசாகரர் | யாப்பெருங்கலக் காரிகை |
| 135. | க. சமுத்திரம் | வேரில் பழுத்த பலா |
| 136. | நா. காமராசன் | கருப்பு மலர்கள் |
| 137. | திருத்தக்க தேவர் | நரிவிருத்தம், எலி விருத்தம், சீவக சிந்தாமணி |
| 138. | ஆசிரியர் பெயர் தெரியவில்லை | நற்றிணை (தொகுத்தவர்) |
| 139. | பூரிக்கோ | குறுந்தொகை (தொகுத்தவர்) |
| 140. | கூடலூர்க்கிழார் | ஐங்குறுநூறு (தொகுத்தவர்) |
| 141. | உருத்திரசன்மன் | அகநானூறு ( தொகுத்தவர்) |
| 142. | வி.கோ.சூரியநாராயண சாஸ்திரி | ரூபாவதி, கலாவதி, மானவிஜயம், நாடகவியல் |
| 143. | மு. மேத்தா | சோழநிலா |
| 144. | சோ. ராமசாமி | மனம் ஒரு குரங்கு, உண்மையே உன் விலை என்ன?, முகமது பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை, இரவில் சென்னை, சம்பவாமி யுகே. யுகே. |
| 145. | உமாபதி சிவாச்சாரியார் | நெஞ்சுவிடு தூது |
| 146. | ச.து.சு. யோகியார் | பாரதசக்தி மகா காவியம் |
| 147. | திருமங்கையாழ்வார் | பெரிய திருமடல் |
| 148. | அகிலன் | வேங்கையின் மைந்தன், கயல்விழி, வெற்றித் திருநகர், சித்திரப்பாவை, நெஞ்சின் அலைகள், பாவை விளக்கு |
| 149. | டாக்டர். மு. வரதராசனார் | அகல்விளக்கு, பெற்றமனம், கள்ளோ காவியமோ? பாவை, அந்தநாள், செந்தாமரை, அல்லி சயனம், மலர்விழி, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், வாடாமலர், மண்குடிசை |
| 150. | அறிஞர் அண்ணா | ஓர் இரவு, ரங்கோன் ராதா, நீதிதேவன் மயக்கம், சந்திரமோகன், கலிங்கராணி, வேலைக்காரி, நல்லதம்பி, குமரிக்கோட்டம், பார்வதி பி.ஏ. |

| | | |
|---|---|---|
| 151. | ஔவையார் | ஆத்திச்சூடி, நல்வழி, மூதுரை, விநாயகர் அகவல், ஞானக்குரல், அசதிக்கோவை |
| 152. | காரைக்கால் அம்மையார் | அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் |
| 153. | கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி | அலையோசை, பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், வீணை பவானி, மகுடபதி, சோலைமலை இளவரசி, அமரதாரா, கள்வனின் காதலி, தியாக பூமி |
| 154. | ஜெயகாந்தன் | சில நேரங்களில் சில மனிதர்கள், உன்னைப்போல் ஒருவன், பாரிஸூக்குப் போ, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், கங்கை எங்கே போகிறாள், ஒரு பிடி சோறு, உதயம், இனிப்பும் கசப்பும், யுகசந்தி |
| 155. | சாண்டில்யன் | மலைவாசல், ஜீவபூமி, கன்னிமாடம், மன்னன் மகள், யவனராணி, கடல்புறா, ஜலதீபம், ராஜபேரிகை, ராஜமுத்திரை |
| 156. | கண்ணன் சேந்தனார் | திணைமொழி ஐம்பது |
| 157. | மாணிக்கவாசகர் | திருவாசகம்<br>திருக்கோவையார் |
| 158. | அ. சீநிவாசராகவன் | வெள்ளப்பறவை |
| 159. | பகழிக்கூத்தர் | திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் |
| 160. | அழகிய சொக்கநாதர் | காந்தியம்மை அந்தாதி, காந்தியம்மை பிள்ளைத்தமிழ் |
| 161. | சேரமான் பெருமாள் நாயனார் | திருக்கயிலாய ஞான உலா |
| 162. | புலவர் புலமைப்பித்தன் | பாவேந்தர் பிள்ளைத்தமிழ் |
| 163. | கவிஞர் தணிகைச்செல்வன் | தலித்தியம் தமிழியம் இந்தியம், மக்கள் எழுத்தாளர்கள் ஒரு பார்வை |
| 164. | வீரகவிராயர் | விநாயக புராணம் |
| 165. | சங்கரதாஸ் சுவாமிகள் | பவளக்கொடி, பிரகலாதன் |

## II(a). சைவம்

- **சைவத்திருமுறைகள் - 12**
- **தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி**
- **நாயன்மார்கள் - 63 பேர்**

| திருமுறைகள் | நாயன்மார்கள் | நூல்கள் |
|---|---|---|
| 1 2 3 | திருஞானசம்பந்தர் | தேவாரம் |
| 4 5 6 | திருநாவுக்கரசர் | |
| 7 | சுந்தரர் | |
| 8 | மாணிக்கவாசகர் | திருவாசகம், திருக்கோவையார் |
| 9 | திருமாளிகைத் தேவர் உட்பட 9 பேர் பாடியது | திருப்பல்லாண்டு, திருவிசைப்பா |
| 10 | திருமூலர் | திருமந்திரம் |
| 11 | திருஆலவாய் உடையார் காரைக்கால் அம்மையார் உட்பட 12 பேர் பாடியது | திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருஇரட்டை மணி மாலை, அற்புத திருவந்தாதி |
| 12 | சேக்கிழார் | பெரியபுராணம் |

- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் மூவர் முதலிகள் எனப்படுவர்.
- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் சமயக் குரவர்கள் எனப்படுவர்.

**திருஞானசம்பந்தர்**

- இயற் பெயர் : ஆளுடையப்பிள்ளை
- ஊர்: சீர்காழி
- மொத்தப்பாடல்கள் : 16 ஆயிரம் பதிகங்கள்
- வேறு பெயர்: திராவிடச்சிசு, காழி வள்ளல், தோடுடைய செவியன்
- சமண மதத்தை போற்றிய கூன்பாண்டியனை சைவத்திற்கு மாற்றியவர்.
- திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பெயரைக் கொடுத்தவர்.
- ஆதிசங்கரர் இவரை திராவிட சிசு என புகழ்ந்து உரைத்துள்ளார்.
- நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று இவரை புகழ்ந்தவர் சுந்தரர்.
- வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தோன்றியவர் என்று இவரை புகழ்ந்தவர் சேக்கிழார்.

**திருநாவுக்கரசர்**

- இயற் பெயர்: மருள் நீக்கியார்
- வேறு பெயர்கள்: வாசீகர், அப்பர், ஆளுடைய அரசு, தாண்டக வேந்தர், தருமசேனர்
- பிறந்த ஊர் : திருவாமூர்
- முதலில் சமண மதத்தை தழுவியவர் தமது தமக்கையாகிய திலகவதியாரால் சைவ சமயத்திற்கு மாறினார்.

- முதலாம் மகேந்திர வர்மனை சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினார்.
- திருநாவுக்கரசரையே இறைவனாக வழிபட்டவர் அப்பூதியடிகள்.

**சுந்தரர்**

- இயற் பெயர்: ஆரூரர்
- பிறந்த ஊர் : திருநாவலூர்
- வேறு பெயர்கள்: வன்தொண்டர், தம்பிரான் தோழன், ஆளுடைய நம்பி, நாவலுரார்
- திருத்தொண்டத் தொகை பாடியவர்

**மாணிக்கவாசகர்**

- இயற்பெயர்: தெரியவில்லை திருவாதவூரர் என்பர் சிலர்
- அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சர்
- இவர் எழுதிய திருவெம்பாவை மார்கழி மாதத்தில் சைவர்களால் பாடப்படுகிறது.

**திருமூலர்**

- இவர் இயற்றிய நூல் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது.
- இவர் ஒரு சித்தர்
- முதல் சித்த நூல் திருமந்திரம். ஆசிரியர் இட்ட பெயர் திருமந்திரமாலை

**காரைக்கால் அம்மையார்**

- இயர் பெயர் : புனிதவதி
- பேய் வடிவம் விரும்பியவர், இறைவனால் அம்மையே என்று அழைக்கப் பெற்றவர்.
- சேக்கிழார்
- இயற்பெயர் : அருண்மொழித்தேவர்
- வேறுபெயர் : உத்தம சோழ பல்லவன் தொண்டர் சீர் பரவுவார்
- பெரியபுராணத்திற்கு இவர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் இது திருத்தொண்டர் மாக்கதை என்றும் அழைக்கப்படுகிறது. இது தமிழில் இரண்டாவது தேசிய காப்பியம் எனப்படுகிறது.

**ஆழ்வார்கள்**

- ஆழ்வார்கள் திவ்விய சூரியர்கள் என போற்றப்படுவர்.
- ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர்.
- பாடல் தொகுப்பு : நாலாயிர திவ்விய பிரபந்தம் மொத்த பாடல்கள் : 3776
- தொகுத்தவர் : நாதமுனி
- இதற்கு ஆன்ற தமிழ் மறை, திராவிட சாகரம் என்ற வேறு பெயர்கள் உண்டு.

| வ. எண் | நூலாசிரியர் | நூல்கள் |
|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | முதலாம் திருவந்தாதி |
| 2. | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி |
| 3. | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி |
| 4. | திருமழிசையாழ்வார் | நான்காம் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் |
| 5. | பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி |
| 6. | ஆண்டாள் | திருப்பாவை, ஆண்டாள் திருமொழி |
| 7. | குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி, முகுந்த மாலை (வடமொழி நூல்) |
| 8. | தொண்டரடிப் பொடியாழ்வார் | திருப்பள்ளியெழுச்சி, திருமாலை |
| 9. | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம், திருக்குறுந் தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் |
| 10. | நம்மாழ்வார் | திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி |
| 11. | மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுதாம்பு |
| 12. | திருப்பாணாழ்வார் | அமலனாதி பதிகம் |

- ❖ பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் மூவரையும் முதலாழ்வார்கள் எனப்படுவர்.
- ❖ பூதத்தாழ்வார் தமிழை ஞானஒளி என்று போற்றினார்.
- ❖ பேயாழ்வார் திருமழிசையாழ்வாரை சைவத்திலிருந்து வைணவத்திற்கு மாற்றினார்.

**பெரியாழ்வார்**

- ❖ இயற்பெயர் : விஷ்ணு சித்தர்
- ❖ ஊர் : ஸ்ரீவல்லி புத்தூர்
- ❖ வேறு பெயர்கள்: பட்டர்பிரான் கிழியறுத்த ஆழ்வார்
- ❖ இவரின் வளர்ப்பு மகள்: ஆண்டாள். ஆண்டாளுக்கு கோதை என்று பெயரிட்டவர்.

**ஆண்டாள்**

- ❖ சிறப்புப் பெயர் : சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாச்சியார்

**நம்மாழ்வார்**

- ❖ ஆழ்வார்களின் தலைவர் எனப்படுபவர்.
- ❖ வேறு பெயர் : சடகோபர், பராங்குசர், மாறன்
- ❖ இவரது பாடல்கள் திரவிட வேதம் என சிறப்பிக்கப்படுகிறது.
- ❖ நம்மாழ்வாரையே தெய்வமாக போற்றியவர் அவரது சீடர் மதுரகவியாழ்வார்.

## பதினெண்மேல்கணக்கு நூல்கள்

### எட்டுத்தொகை நூல்கள்

| வ.எண் | நூல் | நூலாசிரியர் | பொருள் |
|---|---|---|---|
| 1. | நற்றிணை (400 பாடல்கள்) | ஆசிரியர் தெரியவில்லை (தொகுத்தவர்) பாண்டியன் மாறன் வழுதி (தொகுப்பித்தவர்) | அகம் |
| 2. | குறுந்தொகை (401 பாடல்கள்) | பூரிக்கோ (தொகுத்தவர்) தொகுப்பித்தவர் தெரியவில்லை | அகம் |
| 3. | ஐங்குநூறு ( 500 பாடல்கள்) | கூடலூர்க்கிழார் (தொகுத்தவர்) இரும்பொறை (தொகுப்பித்தவர்) | அகம் |
| 4. | பதிற்றுப்பத்து (80 பாடல்கள்) | தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை | புறம் |
| 5. | பரிபாடல் (70 பாடல்கள் 22 மட்டும் கிடைத்துள்ளது) | தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை | அகம்+புறம் |
| 6. | கலித்தொகை (150 பாடல்கள்) | நல்லந்துவனார் (தொகுத்தவர்) | அகம் |
| 7. | அகநானூறு (400 பாடல்கள்) | உருத்திர சன்மனார் (தொகுத்தவர்) பாண்டியன் உக்கிரப் பெருவழுதி (தொகுப்பித்தவர்) | அகம் |
| 8. | புறநானூறு (400 பாடல்கள்) | ஆசிரியர் தெரியவில்லை | புறம் |

### பத்துப்பாட்டு நூல்கள்:

| நூல் | நூலாசிரியர் | சிறப்புப் பெயர் | பொருள் |
|---|---|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | நக்கீரர் | புலவராற்றுப்படை | புறம் |
| 2. பொருநராற்றுப்படை | முடத்தாமக்கண்ணினார் | | புறம் |
| 3. பெரும்பாணாற்றுப்படை | உருத்திரக்கண்ணனார் | பாணாறு | புறம் |
| 4. சிறுபாணாற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் | | புறம் |
| 5. கூத்தாற்றுப்படை | பெருங்கௌசிகனார் | மலைபடுகடாம் | புறம் |
| 6. குறிஞ்சிப்பாட்டு | கபிலர் | காப்பியப் பாட்டு, பெருங் குறிஞ்சி | அகம் |
| 7. முல்லைப்பாட்டு | நப்பூதனார் | நெஞ்சாற்றுப்படை | அகம் |
| 8. பட்டினப்பாலை | உருத்திரங்கண்ணனார் | வஞ்சிநெடும்பாட்டு | அகம் |
| 9. நெடுநல்வாடை | நக்கீரர் | | அகம் (அ) புறம் |
| 10. மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் | மாநகர்ப் பாட்டு | புறம் |

## பதினென்கீழ்கணக்கு நூல்கள்

| நூல் | நூலாசிரியர் | பொருள் |
|---|---|---|
| 1. நாலடியார் | சமண முனிவர்கள் | அறநூல் |
| 2.நான்மணிக்கடிகை | விளம்பி நாகனார் | ‘’ |
| 3. இன்னா நாற்பது | கபிலர் | ‘’ |
| 4. இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | ‘’ |
| 5. திரிகடுகம் | நல்லாதனார் | ‘’ |
| 6. ஆசாரக்கோவை | பெருவாயின் முள்ளியார் | ‘’ |
| 7. பழமொழி | மூன்றுறையரைனார் | ‘’ |
| 8. சிறுபஞ்ச மூலம் | காரியாசன் | ‘’ |
| 9. ஏலாதி | கணிமேதாவியார் | ‘’ |
| 10. முதுமொழிக்காஞ்சி | கூடலூர்க்கிழார் | ‘’ |
| 11. திருக்குறள் | திருவள்ளுவர் | ‘’ |
| 12. ஐந்திணை ஐம்பது | மாறன் பொறையனார் | அகநூல் |
| 13. திணைமொழி ஐம்பது | கண்ணன் சேந்தனார் | ‘’ |
| 14. ஐந்திணை எழுபது | மூவாதியார் | ‘’ |
| 15. திணைமாலை நூற்றைம்பது | கணிதமேதாவியர் | ‘’ |
| 16. கைந்நிலை | புல்லங்காடனார் | ‘’ |
| 17. கார்நாற்பது | கண்ணன் சேந்தனார் | ‘’ |
| 18. களவழி நாற்பது | பொய்கையார் | புறநூல் |

## ஐம்பெரும்காப்பியங்கள்

1. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
2. மணிமேகலை - சீத்தலை சாத்தனார்
3. சீவக சிந்தாமணி - திருத்தக்க தேவர்
4. வளையாபதி - ஆசிரியர் தெரியவில்லை
5. குண்டலகேசி - நாதகுத்தனார்

## ஐஞ்சிறுக்காப்பியம்

1. சூளாமணி - தோலாமொழித்தேவர்
2. நீலகேசி - ஆசிரியர் தெரியவில்லை
3. யசோதர காவியம் - வெண்ணாவலூர் உடையார் வேள்
4. உதயன குமார காவியம் - தெரியவில்லை
5. நாககுமார காவியம் - தெரியவில்லை

- ❖ சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.
- ❖ சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி வளையாபதி மூன்றும் சமண காப்பியங்கள்.
- ❖ மணிமேகலை குண்டலகேசி பௌத்த காப்பியங்கள்.
- ❖ ஐஞ்சிறுக்காப்பியங்கள் அனைத்தும் சமண காப்பியங்கள் ஆகும்.

**சிலப்பதிகாரம் :** 3 காண்டம் 30 காதைகள்

1. புகார் காண்டம் - 10 காதைகள்
2. மதுரைக் காண்டம் - 13 காதைகள்
3. வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்

- ❖ கண்ணகியின் வரலாற்றை இளங்கோவடிகள் எழுத வேண்டும் (அடியேன் நீரே அருளுக) என்று சொன்னவர் - சீத்தலைச் சாத்தனார்.
- ❖ சிறப்புப் பெயர்கள் : முதல் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசியக் காப்பியம்
- ❖ உரை எழுதியவர் : அடியார்க்கு நல்லார்

**மணிமேகலை**

- ❖ காண்டப் பிரிவுகள் இல்லை காதைகள் 30 உள்ளன.
- ❖ இந்நூலுக்கு மணிமேகலை துறவு என்ற சிறப்புப் பெயர் உண்டு. தமிழின் இரண்டாம் காப்பிய நூல்.

**சீவக சிந்தாமணி :** 13 இலம்பகம் 3145 பாடல்கள்

- ❖ விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்.
- ❖ இதற்கு மணநூல், காமநூல், முக்தி நூல் என்ற வேறு பெயர்களும் உண்டு.
- ❖ இதன் காப்பியத் தலைவன் : சீவகன்
- ❖ இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் எழுதிய வேறு நூல் நரிவிருத்தம்.
- ❖ ஜி.யு. போப் இவரை தமிழ்க் கவிஞர்களின் அரசன் என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்.
- ❖ உரை எழுதியவர் : நச்சினார்க்கினியர்

**குண்டலகேசி -** 224 பாடல்கள்

- ❖ வேறுபெயர்கள் : குண்டலகேசி விருத்தம், அகலகவி

**கம்பராமாயணம் -** இதிகாசங்களில் முதலாவது

- ❖ இது ஒரு வழி நூல். வடமொழியில் வால்மீகி எழுதியது முதல் நூல்.
- ❖ எழுதியவர் : கம்பர். கம்பரை ஆதரித்தவர் : சடையப்ப வள்ளல்
- ❖ காண்டம் : 6 படலம் : 118 பாடல்கள் : 10368

| | |
|---|---|
| 1. பால காண்டம் | 2. அயோத்தியா காண்டம் |
| 3. ஆரண்ய காண்டம் | 4. கிஷ்கிந்தா காண்டம் |
| 5. சுந்தர காண்டம் | 6. யுத்த காண்டம் |

- ❖ தமிழில் மிகப் பெரிய நூல் கம்பராமாயணம்.

**திருக்குறள் -** அதிகாரம் 133 மொத்த பாடல்கள் 1330

| | | | |
|---|---|---|---|
| **முப்பால் -** | 1. அறத்துப்பால் | - | 38 அதிகாரங்கள் |
| | 2. பொருட்பால் | - | 70 அதிகாரங்கள் |
| | 3. காமத்துப்பால் | - | 25 அதிகாரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| **வேறுபெயர்கள்:** | 1.உத்திர வேதம் | 2. தெய்வ நூல் | 3. பொய்யாமொழி |
| | 4. வாயுறை வாழ்த்து | 5. தமிழ் மறை | 6. பொது மறை |

**ஆசிரியர் :** திருவள்ளுவர்

| | | | |
|---|---|---|---|
| **சிறப்புப் பெயர்:** | 1. வள்ளுவநாயனார் | 2. தேவர் | 3. முதற்பாவலர் |
| | 4. தெய்வப்புலவர் | 5. நான்முகன் | 6. மாதானுபங்கி |
| | 7. செந்நாப்போதார் | 8. பெருநாவலர் | |
| | 9. பொய்யில் புலவன் | | |

| | | | |
|---|---|---|---|
| **உரை ஆசிரியர்கள்:** | 1. தருமர் | 2. மணக்குடவர் | 3. தாமத்தர் |
| | 4. நச்சர் | 5. பரிமேழகர் | 6. பரிதி |
| | 7. திருமலையர் | 8. மல்லர் | 9. பரிப் பெருமாள் |
| | 10. காளிங்கர் | | |

**ஆசிய ஜோதி**

- புத்தரின் புனித வாழ்வின் அற்புதங்களை விளக்கும் இனிய கவிதை நூலே "ஆசிய ஜோதி" என்னும் நூலாகும். எட்வின் அர்னால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய "LIGHT OF ASIA" என்னும் நூலைத் தழுவித் தமிழில் இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது. ஆசிய ஜோதியை இயற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.
- இவர் மலரும் மாலையும், உமர்கய்யாம் பாடல்கள், குழந்தைச் செல்வம் முதலிய பல கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

**முத்தொள்ளாயிரம்**

- பண்டைத் தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பெற்றது. சேர, சோழ, பாண்டியரின் ஆட்சிச் சிறப்பு, வீரம், நாட்டு வளம் முதலியன பற்றிப் பாடிய பாடல் தொகுப்பே முத்தொள்ளாயிரம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**தில்லைக் கலம்பகம்**

- தில்லைக் கலம்பகத்தைப் பாடியோர் இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டைப் புலவர்கள். இவர்கள் இரட்டைப் புலவர்கள் எனப் போற்றப்பட்டனர்.
- கலம்பகம் என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. பதினெட்டு உறுப்புகள் அமைய, நால்வகைப் பா இனங்கள் கலந்து வர, அந்தாதி தொடையாக நூறு செய்யுள்களால் பாடப்படுவது கலம்பகம் ஆகும்.